புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

# பெரியபுராணம் உணர்த்தும் சுயநலமின்மை

**ஆய்வாளர்**

**அ.பா. நவீன் குமார்,**

*முனைவர்பட்ட ஆய்வாளர்,*

*தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம்,*

*சேலம் – 636 011.*

**நெறியாளர்**

**முனைவர் தி. பெரியசாமி**

பேராசிரியர் & துறைத்தலைவர் ,

*தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம்,*

*சேலம் – 636 011.*

**ஆய்வுச் சுருக்கம்**

*அரிய பிறப்பான மானுடப்பிறவி எடுத்து பிறருக்கு உதவும் வகையில் வாழ்ந்து இறைவனை அடையும் வழியைச் சேக்கிழார் பெருமான் தான் இயற்றிய பெரியபுராணத்தின் மூலம் உலகிற்கு உணர்த்துகிறார். மனிதர்கள் அல்லாத பிற உயிரினங்கள் கூட தன்னுடன் இருக்கும் உயிர்களை எந்த நிலையிலும் காத்து நிற்கின்றது. சாதி, மத, வேறுபாடின்றி விலங்குகள் கூட ஒற்றுமையாக இருக்கின்றது. ஆனால், மனித விலங்கு இதற்கு விதிவிளக்கு. இதில் இருந்து தப்பி முழுமனிதர்களாக அவதரித்த நாயன்மார்கள் சுயநலம் இல்லாமல் பிறர்*

*நலனில் அக்கரை கொண்டவர்களாக இருந்தார்கள் என்பதைப் பற்றிப் பெரியபுராணம் விளக்குகின்றது. மனிதர்களுக்கு மனிதர்கள் உதவும் பாங்கு இன்றைக்கு மிகவும் குறைந்து விட்டது. மனிதனுக்கு மிக முக்கியமான அணிகலனாக விளங்குவது 'மனிதாபிமானம்'. அம் மனிதாபிமானம் இல்லாத மனிதன் விலங்கிற்கு சமம். ஆனால் அக்காலத்தில் வாழ்ந்த சிவன் அடியார்கள் பிறரின் நலனுக்காக தன்னை வருத்திக் கொண்டும், உயிரை மாய்த்துக் கொண்டும், தன்னுடன் வாழ்ந்த சக மனிதர்களுக்காக தனது தன்மானம், இன்பம், துன்பம் இவற்றையெல்லாம் துறந்து சுயநலமில்லாமல் தாங்கள் செய்த திருத்தொண்டின் விளைவாக இறுதியில் இறைவனை அடைந்தார்கள். அந்நிலையை அடைந்தது மட்டுமல்லாமல் அவர்களை நாம் கடவுளாக வணங்கும் பாங்கும் நம்மிடையே ஏற்பட்டது. இந்த இறைநிலையை எடுத்துரைக்கும் விதமாக இக்கட்டுரையின் ஆய்வு அமைகிறது.*

**முன்னுரை**

*பெரியபுராணம் சேக்கிழாரால் 12 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இயற்றப்பட்டது. இதில் 63 சிவனடியார்களின் வாழ்க்கை வரலாறு விளக்கப்பட்டுள்ளது. இவர்கள் பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு சூழ்நிலைகளில் வாழ்ந்தவர்கள். இவர்கள் அச்சூழ்நிலையில் வாழ்ந்தபோதிலும் மனிதர்களை மனிதர்களாக பார்க்கும் ஒற்றுமை பண்பே இவர்களிடம் மேலோங்கி இருந்தது. இவ்வடியார்கள் மனிதர்களை மனிதர்களாகவும், கடவுளாகவும் இருவகையாக பார்த்தனர். மனிதர்ககுக்கு செய்யும் தொண்டே சிறந்த இறைத்தொண்டாக எண்ணினார்கள். அவ்வாறு தாங்கள் மேற்கொண்ட பணியினை சுயநலமில்லாமல் செய்த செயல்களிள் மூலம் இறைநிலையை அடைந்ததாக பெரியபுராணம் கொண்டு விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.*

**அடியார்களின் நலம் பேணல்** *:*

*"மனிதரில் மூன்று வகை :*

1. *மனிதரில் விலங்கு - செய்வன தவிர்வன அறியாது உண்டு உடுத்து உலாவி உவகையுறுபவர்.*
2. *மனிதரில் மனிதர் - நன்மை தீமை தெரிந்து மனதைச் சென்ற விடத்துச் செலவிடாது தடுத்து, தீது ஓரிஇ நன்றின்பால் உய்ந்து நலமுற வாழ்பவர்.*
3. *மனிதரில் தேவர் - மெய்யுணர்வு பெற்று, தான் எனது இன்னும் இரு வகை பற்றுகளும் அற்று, பற்றற்றானைப் பற்றித் திருவருள் நெறி நின்று கருணை வடிவானவராய் வாழ்பவர்" **(அதுபோல கிருபானந்தவாரியார் ப. எண் : 7, 8 ).***

*என்பது போல சிவனை வணங்கும் அடியார்களுக்கு துன்பம் ஏற்படும்போதெல்லாம் தனது உயிரை மாய்த்தும் அடியார்களின் நலனைப் பேணி காத்தும் நின்றார்கள் நாயன்மார்கள்."தலைமை அஞ்சலகத்தில் இட்ட அஞ்சல், அஞ்சல் பெட்டிக்கு வராது. அஞ்சல் பெட்டியில் இட்ட அஞ்சல் தலைமை நிலையத்துக்குச் சேர்ந்து விடும். அதுபோல, ஆண்டவனுக்குத் தந்த ஒன்று அடியார்களுக்குச் சேராது. அடியார்களுக்குத் தந்தது ஆண்டவனுக்குச் சேரும். தலைமை அஞ்சலகம் இறைவன்; அஞ்சல் பெட்டி அடியார்கள் எனவுணர்க" **(கிருபானந்த வாரியார், அதுபோல, ப.எண்: 11).** அவ்வாறு அடியவர்களை இறைவனாக எண்ணி அவர்களுக்கு தேவையானவற்றை வழங்குவதைப் பற்றி பெரியுராணம் கூறுகின்றது.*

**அடியார்களுக்கு வேண்டியது செய்தவை**

- *ஆடை - நேச நாயனார்*
- *முடி - மானக்கஞ்சாறர்*
- *நெல் - இளையாங்குடி மாறநாயனார்*

*மனித இனத்திற்கு மிக முக்கியமாக விளங்குவது உணவு, உடை, இருப்பிடம். இவற்றில் பெரிய புராணத்தில் வரும் சைவ அடியார்கள் சிவனிற்காக உண்ண உணவும் உடுத்த உடையும் வழங்கியுள்ளார்கள். இருப்பிடத்தை ஏன் அடியார்கள் அரணாருக்கு வழங்கவில்லை என்றால், இந்த பூலோகமே அவனின் இருப்பிடமாக இருப்பது தான் காரணம். இந்தப் பூலோகமே இறைவனின் படைப்பு தான் ஆனால், தன்னை வழிபடும் குடும்பத்தை வாழ வைத்து அவர்களை இவ்வுலகிற்கு அடையாளம் காட்டுவதில் வள்ளலாக சிவபெருமான் விளங்குகிறார். அனைத்தும் தன் வசம் வைத்திருந்தாலும் எதுவுமே இல்லாதது போல தன்னை வணங்கும் அடியார்களின் இல்லத்தில் ஒரு ஏழையாக வந்து ஒரு கைப்பிடி உணவை யாசகமாக கேட்டு பெறுவதில் ஆண்டவனுக்கு அத்துணை ஆனந்தம் போலும். மனிதர்கள் கடவுளை தேடி அலைகின்றனர்; இது மதக் கருத்து; நல்ல மனிதர்களை தேடி இறைவனே ஓடி வருகிறார்; இது தான் ஆன்மிகம். தன்னை வழிபடும் அடியார்களுக்கு எதிர்பாராத வரத்தினை வழங்கி மகிழ்வார். 'தலைவன் எவ்வழியோ தொண்டனும் அவ்வழி' இன்று வாய்மொழிக்கு ஏற்ப தன்னை நாடிவரும் அடியார்களுக்கு இல்லை என்று கூறாமல் வழங்கி அகமகிழ்வது அவர்களின் திருத்தொண்டுகளில் ஒன்றாகும். அவ்வகையில், அடியார்களுக்கு அடியார்களே பணி செய்யும் விதமாக பெரியபுராணத்தின் நேசநாயனார் இறைவனை வணங்கும் அடியார்களுக்கு ஆடை வழங்கியும், மானக்கஞ்சாறர் தன்னை நாடி வந்த அடியாருக்கு தன் மகளின் கூந்தலை வழங்கியும், இளையான்குடி*

*மாறநாயனார் தன்னை தேடி வரும் அடியார்களின் பசியினை போக்கும் பேற்றினையும் பெற்றிருந்தார். "மனித உருவில் பிறந்தார்கள் தெய்வநிலையும் அடைவாரே மனிதநேயம் நெஞ்சில் வந்தால் கனியும் மாந்தர்க்கு பக்கியமே" **(அன்புள்ள அய்யா யூடியூப் வலைதள பக்கம்)** என்ற வரிகளுக்கேற்ப சேக்கிழார் பெருமான் தான் இயற்றிய பெரியபுராணத்தில் வரும் நாயன்மார்கள் மனிதப் பிறப்பெடுத்து தாங்கள் செய்த செயற்கரிய காரணத்தால் இறுதியில் இறைநிலையை அடைந்தார்கள்.*

***நேச நாயனார்***

*நேசனுக்கும் அடியேன் **(கிருபானந்த வாரியார், பெரியபுராணம் ப.எண் : 671)** நேசநாயனார் காம்பீலி என்னும் பழம்பெரும் ஊரில், காளர் மரபில் அவதரித்தார். தன்னுடைய பெயருக்கு ஏற்றார் போல இறைவனிடத்தும் இறைவனை வணங்கும்பவர்களிடத்தும் அளவுக்கடந்த நேசம் வைத்திருந்தார் நேசனாயனார். "இவர் மனம் முக்காலமும் முக்கண்ணனின் மென்மலர்த் தாளினை நினைக்க - வாக்கு திருவைந்தெழுத்து மந்திரத்தைச் சொல்ல - காயம் திருசடைபிரானுக்குத் திருப்பணிகள் பல செய்தன" **(நாகர்கோவில் கிருஷ்ணன், அருள்பெற்ற நாயன்மார்கள் ப.எண்: 615)** "தம் உள்ளத்தினைச் சிவனடிக்கு என ஆக்கினார், பேசும் நாவினை ஐந்தெழுத்து ஒதுவதற்கு ஆக்கினார், உழைக்கும் கைகளை உடையும், கீளும், கோவணமும் சிவனடியார்க்கு நெய்து அளிப்பதற்கு ஆக்கினார்" என்று புலவர் சு. சடையப்பன் கூறுகின்றார் **(சடையப்பன்.சு , அறுபத்துமூவர் வரலாறு ப.எண்: 320)***

*'ஆங்கவர் மனத்தின் செய்கை அரனடிப்பேதுக்கு ஆக்கி*
*ஒங்கிய வாக்கின் செய்கை உயர்ந்த அஞ்செளுத்து ஆக்கி*
*தாங்கு கைத்தொழிலின் செய்கை தம்பிரான் அடியார்க்கு ஆகப்*
*பாங்குடை உடையும் கீளும் பழுதில் கோவணமும் நெய்வார்' **(பெரிய.பா. 4199)***

*இவ்வாறு தனது வாழ்நாள் முழுவதும் மனிதர்களுக்கு தேவையான ஆடையினை வழங்கி மகிழ்ந்தது மட்டுமல்லாமல் அகிலத்தைக் காக்கும் ஈசனுக்கே ஆடை நெய்து கொடுக்கும் பேற்றினையும் பெற்றவராவார். நேசர் செய்த செயலில் அகம் மகிழ்ந்த எம்பெருமான் ஈசன் அவருக்கு இறுதியில் பரலோகப் பதவியை வழங்கி மகிழ்ந்தார்.*

*'...சீலமிகுந் திருத்தொண்டர்க்கு உடையும் சேர கீளும்*
*திருத்தியவெண் கோவணமும் சேர ஈந்து*
*பாலனைய ஒளிநீற்றான் பாதம் ஏத்திப்*
*பரலோக முழுத்தாண்ட பான்மையாரே' **(திருத்தொண்டர் புராணசாரம்)***

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற வரிகளுக்குக்கேற்ப தான் மேற்கொண்ட தொழிலில் காதல் கொண்டு இன்பம் கொண்ட நாயனார் இவ்வையகத்தை ஆளும் ஈசனுக்கும், அவரை வழிபடும் அடியார்களுக்கும் ஆடை நெய்து, தனக்காக எதையும் வைத்துக்கொள்ளாமல் பிறருக்கு ஆடை வழங்கி சுயநலமில்லாமல் வாழ்ந்து இறுதியில் இறைநிலையை அடைந்தார் என்பதை பெரியபுராணம் கூறுகின்றது.

***மானக்கஞ்சாறர்***

*'மலைமலிந்ததோள் வள்ளல் மானக்கஞ்சாறனுக்கு அடியேன்'* ***(அருள் பெற்ற நாயன்மார்கள்,ப.எண்: 274)***. மானக்கஞ்சாறர் கஞ்றாறூர் என்னும் வளமும் நலமும் மிக்க திருத்தலத்தில் உழவர் குடியில் அவதரித்தார். மன்னரின் படைத்தலைமை தாங்கி, ஓங்கு புகழ் தேங்கிய பெறுமையர், சிவனடியார்க்குத் தொண்டு செய்வதில் தனது தலையாய கடமையாக எண்ணினார். இவ்விருவருக்கும், மக்கட்பேறு பலவருடங்களாக இல்லை. ஒரு மனிதன் எத்தனை செல்வங்களை தன்வசம் வைத்திருந்தாலும் அது அவர்களுக்கு ஒருபோதும் உண்மையான பெருமையினையும், மகிழ்ச்சியும் அளிக்காது. அவர்களுக்கு பிறக்கும் மக்கட் செல்வமே அவர்களுக்கும் அவர்களது தலைமுறையினருக்கும் பெருமையினையும், மகிழ்ச்சியினையும் வழங்கும் உண்மையான செல்வமாகும்.

*'பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவந்த*
*மக்கட்பேறு அல்ல பிற'* ***(குறள் - 61)***

என்பதை திருவள்ளுவர் மக்கட்பேறு என்னும் அதிகாரத்தில் கூறியுள்ளார்.

*'குழைக்கலையும் வடிகாகிற் கூத்தனார் அருளாலே*
*மழைக்கும் பெருங்கற்பின் மனைகிழத்தி யார்தம்பால்*
*இழைக்கும்வினைப் பயன்சூழ்ந்த இப்பிறவிக் கொடுஞ்சூழல்*
*பிழைக்குநெறி தமக்குதவப் பெண்கொடியைப் பெற்றெடுத்தார்'* ***(பெரிய.பா - 881)***

நாயனாரின் அன்பான ஒரே மகள் வளர்ந்து திருமண வயதை எட்டினாள். இவர்களுக்கு பெண்பார்க்கும் பொருட்டு ஏயர்கோன் கலிகாமரிடத்தின் உறவினர்கள் நாயனாரின் இல்லம் வந்தடைந்தனர். பிறகு இருவருக்கும் திருமண ஏற்பாடு நடந்து கொண்டிருக்கும் வேளையில் நாயன்மாரின் குடும்பத்தை உலகிற்கு அடையாளம் காட்டும் வண்ணம் எம்பெருமான் அடியாரது திருக்கோலம் பூண்டு மனை விழாவிற்கு வருகை புரிந்தார். மானக்கஞ்சாறாரிடம் இங்கு என்ன நடக்கின்றது என்று வினவினார். திருமணம் நடக்க இருக்கின்றது என்று நாயனார் பதிலளித்தார். அடியாரது ஆசியினை பெற கஞ்சாறரின் அன்பு மகள் ஆசி வாங்குகையில் அடியார் அந்த மகளின் கூந்தலை பார்த்து வியந்தும் அதன்மேல்

*ஆசைக்கொண்டு நாயனாரிடம் 'உன்னுடைய மகளின் கூந்தலை எனக்கு கொடு அது என் பஞ்சவடிக்கு உதவும்' என்றுகேட்கிறார்.*

*"தவம்புரிந்து மிகுந்த அழகு செய்வது சூழல். 'இவள் கூந்தல் நமது பஞ்சவடிக்கு ஆகும்' என்றே மாவிரதியிர் கூறினார்" **(கிருபானந்த வாரியார், பெரியபுராணம் ப.எண்: 221).** கொஞ்சமும் முகம் சுழிக்காத நாயனார் தனது ஒரே மகளின் கூந்தலை அடியாருக்கு வழங்கினார்.*

*'ஒருமகள் கூந்தல் தன்னை வதுவைநாள் ஒருவர்க் கீந்த*
*பெருமையார் தன்மை போற்றும் பெருமை யென்னளவிற்றாமே' **(பெரிய.பா - 907)***

*தனது மகளும் இதற்கு சம்மதம் தெரிவித்தது அவர்களின் பெற்றோர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியினை அளித்தது.*

*'தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து*
*மன்னுயிர்க்கு எல்லம் இனிது' **(குறள் - 68)***

*பெண்களுக்கு அழகே கூந்தல் தான். ஆனால், அக்கூந்தலை தனது தந்தை கேட்டார் என்பதற்காகவும், தான் வணங்கும் இறையடியார்கள் கேட்டதற்காகவும் சிறிதும் யோசிக்காத அப்பெண்மகள், பெற்றோரின் பெயரினையும், சுயநலமின்மையையும் மானக்கஞ்சநாயனாரின் குடும்பத்தினர் நிலை நிறுத்தினார்கள். இவர்கள் செய்த இத் திருத்தொண்டின் இறுதியில் இறைவன் தான் கேட்ட கூந்தலையும், அவர்கள் கேட்காத முக்தியையும் வழங்கி மகிழ்ந்தார்.*

***இளையான்குடி மாறநாயனார்***

*"இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்" **(கிருபானந்த வாரியார், பெரியபுராணம், ப.எண்: 125)**. மாறனார் இளையான்குடியில் தோன்றிய காரணத்தினால் இளையான்குடி மாறநாயனார் எனப்படுவார். இவர் அனுதினமும் சிவ அடியார்களுக்கு திருவமுது படைக்கும் பக்கியம் பெற்றவர். இல்லம் நாடி வருவோர்க்கு இல்லை என்று கூறாமல் அமுது வழங்கிய வள்ளல். "மும்பின் தெரியாதவர்களை எவ்வாறு விரும்பி உபசரித்தார்? இது சாதாரண மனித இயல்பு அல்லவே? சிவபிரானின் அடியவர்கள் என்று இளையான்குடியார் நினைத்த காரணத்தால் அவர்களிடம் குளிரப் பேசி உணவுக்கு அழைத்து வந்தார்" **(அ.ச. ஞானசம்பந்தன், பெரியபுராணம் ஓர் ஆய்வு,ப.எண்: 263).** இதனை,*

*'கொண்டு வந்துமனைப்பு குந்து குலாபு பாதம் விளக்கியே*

*மண்டு காதலின் ஆதனித்து இடை வைத்து அருச்சனை செய்தபின்*
*உண்டி நாலுவித்தில் ஆறு சுவைத் திறத்தினில் ஒப்பு இலா*
*அண்டர்நாயகர் தொண்டர்இச்சையில் அமுதுசெய்ய அளித்துஉளார்'* ***(பெரிய.பா. 443)***

*இப்பாடலின் மூலம் அடியார்களை வணங்கி வழிபடும் நிலையும், அவர்களுக்கு செய்யும் திருத்தொண்டே இறைவனுக்குச் செய்யும் தொண்டாகக் எண்ணும் நிலையும் புலனாகின்றது. இவர் தனக்காக எதையும் சேகரிக்காமல் வரும் அடியார்களுக்கு திருவமுது படைத்து மகிழ்ந்தார். எந்த சூழலிலும் தான் மேற்கொண்ட செயலை செய்து வந்த நாயனாருக்கு இறைவனின் கருணையால் வறுமை ஏற்படுகின்றது. இறைவன் அருளால் வறுமை வருவதும் ஒரு வகை இன்பமாகத்தான் நாயனாருக்கு தோன்றியது. என்பதை,*

*'செல்வம் மேவிய நாளில் இச்செயல் செய்வதன்றியும் மெய்யினால்*
*அல்லல் நல்குவர வான போதினும் வல்லர் என்றறி விக்கவே*
*மல்லல் நீடியசெல்வம் மெல்ல மறைந்து நாடோறும் மாறிவந்து*
*ஒல்லையில் வறுமைப்ப தம்புக உன்னினார் தில்லை மன்னினார்'*

***(பெரிய.பா.445)***

*இதில் 'வல்லர்' என்பதற்குச் "செல்வம் வந்த காலத்து அடியார் பூசை செய்வதற்கு அடியார் திறத்து நிறைந்து திருந்திய சிந்தை வேண்டும்; நல்குவரவு வந்தபோது அது செய்வதற்கு அதனினும் பெரியதோர் வன்மை வேண்டும் என்பார்" என்று விளக்கம் தருகின்றார்* ***(சுப்பிரமணியம் சி.கே., தொகுதி 1, ப.எண்: 553).*** *நாயனார் எவ்வளவு வறுமையில் இருந்தாலும் தன்னுடைய பிறவி குணம் மாறாமல் வரும் அடியார்களுக்கு தான் செய்து வந்த திருத்தொண்டினை இடையறாது மேற்க்கொண்டு வந்தார் என்பதனை குறிக்கும் வகையில் பின்வரும் மூதுரை பாடல் அடிகள் குறிக்கின்றது.*

*'அட்டாலும் பால்சுவையிக் குன்றாது அளவாய்*
*நட்டாலும் நண்(பு) அல்லார் நண்(பு) அல்லர்*
*கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு*
*சுட்டாலும் வெண்மை தரும்'* ***(மூதுரை - 4)***

*என்னும் பாடலின் மூலம் நாயனாரின் குணத்தை நாம் அறியலாம்.*

*'செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்து இருப்பான்*
*நல்விருந்து வானத் தவர்க்கு'* ***(குறள் - 86)***

*என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப இப்பிறவியில் தன்னிடம் வந்த விருந்தினரை உபசரித்து, மேலும் வரக்கூடிய விருந்தினரை எதிர் பார்த்திருப்பவன் மறுமையில் தேவனாய் வானுலகில் வாழும் தேவர்க்கும் நல்ல விருந்தினன் ஆவான்.அடியார்களை ஆர்வமுடன் அழைத்து*

*எச்சூழலிலும் விருந்திடும் பண்பினை நாயனர் தன்னகத்தில் வைத்திருந்தார். இதனை குறிப்பிடும் வகையில் மநு தர்மம் என்ற நூலில் பின்வருமாறு ஆசிரியர் தமிழ்நாடன் கூறுகின்றார், "தேடி வந்த விருந்தினரை வரவேற்று, இருக்கை, படுக்கை, உணவு வழங்குதல் வேண்டும். விருந்தினர்க்கு, இவை கிடைக்காது வருத்தமேற் படக்கூடாது" **(தமிழ்நாடன், மநு தர்மம், ப.எண்: 60).** நம் இல்லம் தேடி வரும் மனிதர்களுக்கு "இன்முகத்துடன் விருந்தோம்பல்" **(இராசேந்திரன். சி,பிறவியின் நோக்கம் பிறவாமை, ப.எண்: 29)** உபசரிக்க வேண்டும் என்று ஆசிரியர் கூறுகின்றார்.*

*'ஆர்வம் உடையவர் காண்பர் அரன்கன்னை*
*ஈரம் உடையவர் காண்பர் இனையடி' **(திருமந்திரம் - 273)***

*என்னும் பாடலின் மூலம் நாயனார் சுயநல எண்ணம் இல்லாமாலும், தனக்கு என்று எதையுமே சேகரித்து வைக்காமலும் தன்னை நாடி வருவோர்க்கு இன்முகத்துடனும் ஆர்வத்துடனும் விருந்தோம்பல் உபசரித்து ஆண்டவனின் திருவருள் பெற்று இறுதியில் இறைநிலையை அடைந்தார்.*

**முடிவுரை**

*மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதற்கு எற்ப மக்களுக்கு செய்யும் ஒவ்வொரு பணியும் இறைவனுக்கு செய்யும் தொண்டு என எண்ணி வாழ்ந்தவர்கள் தான் பெரியபுராணத்தில் வரும் அடியார்கள். ஒரு மனிதன் தன்நிலை மறந்து பிறரின் நிலைக்காக வாழ்வதே சுயநலமில்லாத பொது தன்மை என்பது இங்கு புலப்படுகிறது.பெரியபுராணத்தில் காணப்படும் ஒவ்வொரு நாயன்மார்களும் மனிதப் பிறப்பெடுத்து தாங்கள் செய்த செயல்களால் இறைநிலையை அடைந்தார்கள் என்பதை அறியமுடிகிறது. மேலும் மனிதர்களுக்கு அத்தியாவசியமானது உணவு, உடை, உறையுள் போன்றவற்றை நாயன்மார்கள் இறைவனை வழிபடும் அடியார்களுக்கு வழங்கினார்கள். அதுமட்டுமல்லாமல் அவர்கள் விரும்பும் பொருட்கள் அனைத்தையும் அடியார்கள் கேட்டுவிட்டால் சிறிதும் யோசிக்காமல் அவர்கள் விரும்பியதை செய்து மகிழ்ந்தனர். இவ்வடியார்கள் பிறரின் நலனுக்காக தன்னை வருத்தியும், உயிரை மாய்த்துக் கொண்டும், தங்களுடன் இருந்த சக மனிதர்களுக்காக தனது தன்மானம், இன்பம், துன்பம், ஆசை, போன்றவற்றை துறந்தனர். இதற்கிடையில் ஆடை வழங்கிய நேச நாயனார், தனது ஒரே மகளின் முடியை அடியார் கேட்ட வழங்கிய மானக்கஞ்சாறர், மற்றும் விதைத்த நெல்லை அரிந்து உணவு வழங்கிய இளையான்குடி நாயனார் போன்றோரின் பணி சாலச் சிறந்தது. அவர்களின் திருத்தொண்டின் பயனாக இறுதியில் இறைவனை அடைந்து இறைவனுடன் கலந்ததை பெரியபுராணம் கொண்டு நம்மால் அறிய முடிகின்றது. இத்தகைய அடியார்களின்*

வழியில் வந்த இன்றைய இளைய தலைமுறையினர்க்கு மனிதாபிமானம் என்ற ஒன்று இல்லாமல் போய்விட்டது என்பது ஆச்சரியாமாக உள்ளது. இந்நிலை மாற வருங்காலத்திலாவது மனிதர்களாகிய நாம் சுயநலம் இல்லாமல் பிறருக்கு சிறிய சிறிய உதவிகளையேனும் செய்வதன் மூலம் நாம் இறைநிலையை அடையாவிட்டாலும் வாழும் காலத்திலே மனித உருவத்தில் இருக்கும் இறைவனை நம்மால் காணமுடியும் என்பது திண்ணம்.

**துணை நூற்பட்டியல்**


1. சுப்ரமணிய முதலியார். சி.கே.,1980, திருத்தொண்டர் புராண உரை, முதல் தொகுதி, தமிழ்ச்சங்க வெளியீடு, சேக்கிழார் நிலையம், கோவை - 641 001.
2. கிருபானந்த வாரியார், 2019, பெரியபுராணம், குகஸ்ரீவாரியார் பதிப்பகம், சென்னை - 600 002.
3. புலவர் நடராசன். பி.ரா., 2020, திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம் மூலமும் – உரையும், முதல் தொகுதி, உமா பதிப்பகம், சென்னை - 600 001.
4. புலவர் நடராசன். பி.ரா., 2020, திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம் மூலமும் – உரையும், நான்காம் தொகுதி, உமா பதிப்பகம், சென்னை - 600 001.
5. புலவர் சடையப்பன். சு., எம்.ஏ.,பி.எட், 2018, பெரியபுராணம் சிவனடியார் அறுபத்துமூவர் வரலாறு, அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை - 600 049.
6. இராசேந்திரன். சி, 2018, பிறவியின் நோக்கம் பிறவாமை, விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர் - 641 001.
7. நாகர்கோவில் கிருஷ்ணன், 2009, அருள்பெற்ற நாயன்மார்கள், நர்மதா பதிப்பகம், சென்னை - 600 017.
8. கிருபானந்த வாரியார், 2014, அதுபோல, குகஸ்ரீவாரியார் பதிப்பகம், சென்னை -600 002.
9. ஞானசம்பந்தன். அ.ச., 1999, பெரியபுராணம் ஓர் ஆய்வு, கங்கை புத்தக நிலையம், சென்னை - 600 017.
10. தமிழ்நாடன், 2021, மநு தர்மம், காவ்யா பதிப்பகம், சென்னை - 600 005.
11. கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம், 2011, திருக்குறள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 600 098.
12. ஞானப்பிரகாசம். வ., 2021, ஔவையார் நீதி நூல்கள் மற்றும் உலகநீதி வெற்றிவேற்கை நன்னெறி நீதிவெண்பா – மூலமும் உரையும், ஸ்ரீ ரெங்கநாயகி பதிப்பகம், மதுரை – 625 001.

13. **மாணிக்கவாசகன்**. **ஞா**., *2014,* **திருமூலர் திருமந்திரம் மூலமும் – விளக்க உரையும்**, *உமா பதிப்பகம், சென்னை - 600 001.*